REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 நவம்பர் 30 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 88 இல. 284 | November 30,Monday, 2020 | 32பக்கங்கள் | 30/-




## வீடுகளில் அதிகரிக்கும் கொரோனா மரணங்கள்



# விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க ஜனாதிபதி பணிப்பு

வீடுகளில் உயிரிழப்பதனை தடுப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாக இராணுவ தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நபர்கள் வீடுகளில் உயிரிழப்பதனை தடுப்பதற்காக விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

06



## புறக்கோட்டை, மட்டக்குளி, டாம் வீதி, ராகம, நீர்கொழும்பு

# மேல் மாகாணத்தில் சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிப்பு

## இன்று அதிகாலை 5.00 மணிமுதல் நீக்கம் என்கிறார் இராணுவத் தளபதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் மேல் மாகாணத்தில் சில பிரதேசங்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தலுக்கான முடக்கம் இன்று அதிகாலை முதல் நீக்கப்பட்டுள்ளதாக கொரோனா



ம் இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால் ஆகியோருக்கிடையில் இரு தரப்பு சந் மாலை இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படம்.




## கொழும்பில் கொரோனா பரவல்

# PHI மாரின் எ... உடனடி நடவடிக்கை அவசியம்

## ஆபத்தான நிலை என அரச மருத்துவர் சங்கம் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் சூழ்நிலை எச்சரிக்கை மிகுந்ததாக காணப்படுகின்ற நிலையில் அதனை கட்டுப்படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளதாக சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளமை ஆபத்தானதென அரசாங்க மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. சுகாதாரத்துறை உயரதிகாரிகள் அது தொடர்பில் உடனடி கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமென்றும் அந்த சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

அத்துடன் ஆஸ்பத்திரிகளில் கொரோனா உப கொத்தணிகள் உருவாவதைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடி

GMOA
Government Medical Officers' Association

வேலைத்திட்டங்களை மேற்கொள்வது அவசியமென்றும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது. சங்கத்தின் இணைப்புச் செயலாளர் டாக்டர்

06

# போக்குவரத்து கட்டுப்பாடுகள் தளர்ந்தால் ஆபத்து அதிகமாகும்

## சுகாதார பரிசோதகர்கள் எச்சரிக்கை விடுப்பு



போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள பகுதிகள் திறக்கப்பட்டால், அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக இலங்கை சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதனூடாக குறித்த பகுதிகளில்

06

## போகம்பறை சிறையிலிருந்து

# தப்பிக்க முயன்ற நான்கு கைதிகள் மடக்கிப் பிடிப்பு



**எம்.ஏ.அமீனுல்லா**

கண்டியில் உள்ள பழைய போகம்பறை சிறைச்சாலையிலுள்ள தனிமைப்படுத்தப்பட்ட நிலையத்திலிருந்து தப்பியோட முயற்சித்த நான்கு கைதிகள் சிறை அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் நள்ளிரவில் தப்பியோட

06

## பிள்ளையான்,லலித் வீரதுங்க ஆகியோரது தீர்ப்பு நியாயமானது

# நீதிமன்ற தீர்ப்புகளை பாராளுமன்றத்தில் விமர்சிப்பதனை ஏற்றுக் கொள்ள முடியாது



## நீதிமன்ற சுயாதீனத்தை பாதுகாப்பது அனைவரினதும் கடமை

பிள்ளையான் மற்றும் லலித் வீரதுங்க ஆகியோருக்கு வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பு நியாயமானது. மக்களின் நம்பிக்கையை இல்லாமலாக்கும் வகையில் நீதிமன்றத்தின் மீது விரல் நீட்டுவது பயங்கரமான விடயமாகும் என நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நீதிமன்ற தீர்ப்புக்கள்

06

# சுவிட்சர்லாந்து நாட்டின் உதவியுடன் விமான நிலையத்தில் PCR கருவி

## நாளொன்றுக்கு 1,300 பரிசோதனைகள்; 3 மணிநேரத்தில் அறிக்கை

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் PCR கருவிகளை பொருத்த சுவிட்சர்லாந்து அரசு உதவி வழங்கியுள்ளது.

சுவிட்சர்லாந்து வழங்கியுள்ள உபகரணங்கள் மூலம் நாளொன்றுக்கு 1,300 பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கைகளை 3 மணித்தியாலங்களுக்குள் பெறமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை மற்றும் மாலைதீவிற்கான கொழும்பு சுவிஸ் தூதரகத்தால் இந்த உபகரணப் பொதிகள் சுகாதார அமைச்சரிடம் வழங்கப்பட்டுள்ளன.

06



# 109 கொரோனா மரணங்களில் 81 கொழும்பு பிரதேசத்தில் பதிவு

## சுகாதார சேவைப் பணிப்பாளர் தகவல்

## ஹற்றன் டன்பார் தோட்டத்தில்

# தனிமைப்படுத்தப்பட்டிருந்த 84 வயது பெண் மரணம்

# வெளிநாடுகளிலிருந்து மேலும் 488பேர் வருகை



# மஹர சிறையிலிருந்த பாகிஸ்தான் பிரஜை பலி

## சிறுநீரக நோயினாலேயே உயிரிழப்பு